[28th February 1968

Administration in Tamil

*112 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —

(*a*) the names of Departments of the Government of Madras where Tamil was ordered to be used for administration by the previous Government ;

(*b*) the Government Departments where Tamil has been ordered to be used by the new Government ;

(*c*) the number of Government Departments which are still carrying on the administration in English ; and

(*d*) the date from which the administration will be carried on in Tamil by these Departments also ?

தமிழில் நிர்வாகம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசின் எந்தெந்த இலாக்காக்களில் தமிழில் நிர்வாகத்தை நடத்த பழைய அரசு உத்தரவிட்டிருந்தது ?

(இ) புதிய அரசு எந்த இலாகாக்களுக்குத் தமிழில் நிர்வாகத்தை நடத்த உத்தரவிட்டுள்ளது ?

(உ) இன்னும் எத்தனை இலாகாக்கள் ஆங்கிலத்தில் நிர்வாகம் நடத்திக்கொண்டிருக்கின்றன ?

(எ) எப்போதிலிருந்து இந்த இலாக்காக்களிலும் நிர்வாகம் தமிழில் நடத்தப்படும் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) பழைய அரசின் உத்தரவுகளுக்கிணங்க ஆட்சிமொழித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அடைந்த முன்னேற்றங்கள் :—

(1) மாவட்ட நிலையிலுள்ள அலுவலகங்களில் தமிழ்த் திட்டம் எல்லாத் துறைகளிலும் முழு அளவில் செயற்படுத்த உத்தரவிடப்பட்டது.

(2) துறைத் தலைவர் அலுவலகங்களில் படிப்படியாக தமிழ்த் திட்டத்தைத் தொடங்கிவைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

(3) அரசு தலைமைச் செயலகத்தில் தமிழ்த் திட்டத்தின் முதல் நிலையைச் செயற்படுத்த உத்தரவிடப்பட்டது.

(இ) புதிய அரசு அமைந்தபின் தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சித்துறையின் எல்லாப் பிரிவுகளிலும், செய்தி விளம்பரத் துறையிலும் தமிழ்த் திட்டத்தை முழு அளவில் செயற்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது ; இதற்கு முன் ஆட்சிமொழிச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப் பெறாமல் விட்டுப்போன மாவட்ட நிலை வரையிலுள்ள சில அலுவலகங்களில் தமிழ்த் திட்டத்தை முழு அளவில் செயற்படுத்த அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(உ) இதுவரை தகவல்கள் சேகரிக்கப்படவில்லை.

(எ) இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

28th February 1968]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, சர்க்காரால் வெளியிடப்படும் "கெஜட்" இன்னும் ஆங்கிலத்தில் வருகிறது. அதை எப்போது முதல் தமிழில் கொண்டுவர முயற்சி எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "கெஜட்" பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

Monuments

*113 *Q.*—**THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the steps taken by the Madras Government in safeguarding the monuments like forts and palaces located at Vellore, Thanjavur, Gingee and Madurai ?**

நினைவுச் சின்னங்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வேலூர், தஞ்சாவூர், செஞ்சி, மதுரை ஆகிய இடங்களில் இருக்கும் கோட்டைகள், அரண்மனைகள், முதலிய நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கத் தமிழக அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (1) வேலூர்க்கோட்டை—இக்கோட்டை தற்போது இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பாதுகாக்கப்படுகிறது. அங்குள்ள கோயில் உட்பட இக்கோட்டையையும் அதைப் பாதுகாக்கும் பொறுப்பையும் இந்த அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு இந்திய அரசை இம்மாநில அரசாங்கம் கேட்டுக் கொண்டு வந்துள்ளது. இந்திய அரசு ஒப்புக்கொள்ளவில்லை. அக்கோட்டையை இந்த மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்கச் சம்மதிக்குமாறு இந்திய அரசை வலியுறுத்தக் கருதப்பட்டுள்ளது.

(2) செஞ்சிக்கோட்டை—இக்கோட்டை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையால் பாதுகாக்கப்பட்டுவருகிறது.

(3) தஞ்சாவூர் கோட்டை :—இக்கோட்டையை மாநிலப் பொதுப் பணித்துறையினர் இப்போது பேணிவருகிறார்கள். மாநிலச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னமாக இதைப் பாதுகாக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(4) திருமலை நாயக்கர் மகால், மதுரை:—தற்போது இது மாநிலப் பொதுப்பணித் துறையினரின் பொறுப்பில் உள்ளது. மாநிலச் சிறப்புமிக்க தொல்பொருள் நினைவுச் சின்னமாக இந்த மகாலைப் பேண முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தை எதிர்காலத்தில் பேணி வருவதற்காக, பொதுப் பணித் துறை இதனை மாநிலத் தொல்பொருள் துறையிடம் விரைவில் ஒப்படைக்கும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, மதுரையில் திருமலை நாயக்கர் மகால் சமீபத்தில் பழுதடைந்து விட்டதாகவும், அதை மராமத்துப் பார்க்க போவதாகவும் தெரிந்தது. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதை பொதுப்பணித் துறை இதுநாள் வரை பேணி வந்தது. இப்போது அதைப் பாதுகாக்கும் முழுப்பொறுப்பையும் மாநிலத் தொல்பொருள் துறையிடம் செலவிலும் முயற்சிகள்தான் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.